

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பேட்டை, அம்பேத்கர் நகரில் புதுப்பிக்கப்பட்ட புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் வெண்கலத் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர், தொல்.திருமாவளவன் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், து.ரவிக்குமார் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, ம.சிந்தனைசெல்வன், தி.வேல்முருகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) ஐயா இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் நிறுவப்பட்டுள்ள ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திரவுருவச் சிலையை திறந்து வைத்து, அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், சி.வி.கணேசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், து.ரவிக்குமார், டாக்டர். எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, ம.சிந்தனைசெல்வன், தி.வேல்முருகன், கோ.அய்யப்பன், சபா.ராஜேந்திரன், ஆர்.ராதாகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் மாநிலத் தலைவர்கள் கே.எஸ்.அழகிரி, கிருஷ்ணசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், ஐயா இளையபெருமாள் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) ஐயா இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் 5 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஐயா எல்.இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், சி.வி.கணேசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், து.ரவிக்குமார், டாக்டர் எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, ம.சிந்தனைசெல்வன், தி.வேல்முருகன், கோ.அய்யப்பன், சபா.ராஜேந்திரன், ஆர்.ராதாகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் மாநிலத் தலைவர்கள் கே.எஸ்.அழகிரி, கிருஷ்ணசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், ஐயா இளையபெருமாள் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை தொடங்கி வைத்து, முகாமில் வேளாண்மை – உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், து.ரவிக்குமார், டாக்டர். எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, சிந்தனைச்செல்வன், தி. வேல்முருகன், சபா.ராஜேந்திரன், கோ.அய்யப்பன், ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், முதல்வரின் முகவரித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் / சிறப்பு அலுவலர் திருமதி.பெ.அமுதா, கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 'உங்களுடன் ஸ்டாலின்' – கழக அரசின் புரட்சிகரத் திட்டத்தின் மூலம்

# கடலூர் மாவட்டப் பொதுமக்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்!

**கடலூர், ஜூலை 17-**

**கடலூர் மாவட்ட பொதுமக்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.**

அதன் விவரம் வருமாறு:-

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 14.7.2025 அன்று இரயில் மார்க்கமாக சிதம்பரம் வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம்(15.7.2025) காலை சிதம்பரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 123வது பிறந்தநாளையொட்டி, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர், சிதம்பரத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்திற்கான முகாமினை தொடங்கி வைத்து, சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் கட்டப்பட்டுள்ள ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை திறந்து வைத்தார்.

இந்தப் பயணத்தின்போது கடலூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அவற்றை உடனடியாக நிறைவேற்றி கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

**1. நடராஜர் கோவில், அண்ணாமலை பல்கலைக்கழகம் போன்ற பல சிறப்பு களை பெற்றுள்ள சிதம்பரம் நகரத்தில், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், தில்லை அம்மன் ஓடை மற்றும் கான் சாகிப் கால்வாய் ஆகியவற்றை ஒட்டி, புதிய இணைப்புச் சாலை ஒன்று 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**



**2. வட மாவட்டங்களில் உள்ள அனைத்து பழங்குடியினரும் பயன் பெறும் வகையில், கடலூர் வட்டத்தில் உள்ள அரிசிபெரியான்குப்பத்தில், புதிய உண்டு உறைவிட பழங்குடியினர் பள்ளி ஒன்று தொடங்கப்படும்.**

**3. காட்டுமன்னார்கோயில் வட்டத்திலிருந்து புதிதாக பிரிக்கப்பட்டுள்ள ஸ்ரீமுஷ்ணம் வட்டத்திற்கும், காவிரி டெல்டா பகுதிக்காக செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களின் பயன்கள் கிடைக்கும் வகையில், ஸ்ரீமுஷ்ணம் வட்டம் காவிரி டெல்டா பகுதியாக அறிவிக்கப்படும்.**

**4. வீராணம் ஏரிப் பகுதியில் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சோழதரத்தில் இருந்து இராஜமதகு வரை படகுச்சவாரி மேற்கொள்ளவும், சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை அமைத்திடவும், 10 கோடி ரூபாய் செலவில் ஏரி தூர் வாரும் பணிகளும் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப்படும்.**

**5. சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன் கோரிக்கையை ஏற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் திறனை மேம்படுத்தி, அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், கூடுவெளி சாவடியில் புதிய திறன் மேம்பாட்டு நிலையமும் தொழிற்பேட்டையும் அமைக்கப்படும்.**

மேலும், நேற்று முன்தினம் காலை ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கம் திறப்பு விழாவில், கடலூர், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி பகுதிகளில் வாழும் மகளிருக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கும் வகையில், குறிஞ்சிப்பாடி அருகில் இருக்கும் கொடுக்கன்பாளையத்தில், 150 ஏக்கர் பரப்பளவில், தோல் அல்லாத காலணி மற்றும் காலணிகளுக்கான உதிரிபாகங்கள் உற்பத்திக்கான பெரும் தொழில் பூங்கா 75 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) மயிலாடுதுறை மாவட்ட கழக தலைமை அலுவலகத்தில் புதுப்பிக்கப்பட்ட அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ.,, மு.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர நாராயணன், மாவட்ட அரசு வழக்கறிஞர் டாக்டர் இராம. சேயோன், மாவட்ட விவசாய அணி தலைவர் டாக்டர் எஸ். நாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) மயிலாடுதுறை, கொள்ளிடம் புறவழிச்சாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கழக கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் ந. கௌதமன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம், கொள்ளிடம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் செல்லசேது. ரவிகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.